**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

செ.வெ.எண்.398 நாள்: 18.08.2026

**வடகிழக்குப் பருவமழை முன்னிட்டு, பெருநகர சென்னை மாநகராட்சி, ஆலந்தூர் மண்டலத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை தெற்கு வட்டார துணை ஆணையாளர் திரு.அஃதாப் ரசூல், இ.ஆ.ப., அவர்கள் இன்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.**

வடகிழக்குப் பருவமழை முன்னிட்டு, பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் உள்ள மழைநீர் வடிகால்வாய்கள், வண்டல் வடிகட்டித் தொட்டிகள், ஏரிகள் மற்றும் குளங்களில் தூர்வாரும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இதன் ஒரு பகுதியாக, இன்று (18.08.2026) தெற்கு வட்டார துணை ஆணையாளர் திரு.அஃதாப் ரசூல், இ.ஆ.ப., அவர்கள், பெருநகர சென்னை மாநகராட்சி, ஆலந்தூர் மண்டலம், வார்டு-161க்குட்பட்ட ஆதம்பாக்கம் கால்வாயில் தூர்வாரும் பணி, வார்டு-163க்குட்பட்ட சுரேந்திரா நகர் 11ஆவது தெருவில் மழைநீர் வடிகால் பணி, வார்டு-164க்குட்பட்ட நங்கநல்லூர் 5வது பிரதான சாலையில் உள்ள வண்டல் வடிகட்டித் தொட்டியில் இருந்து வண்டல்கள் அகற்றும் பணி உள்ளிட்டவற்றைப் பார்வையிட்டு ஆய்வு செய்து, மீதமுள்ள மழைநீர் வடிகால்கள் மற்றும் வண்டல் வடிகட்டித் தொட்டிகளிலும் தூர்வாரும் பணிகளை மேற்கொண்டு பணிகளை விரைந்து முடித்திட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

தொடர்ந்து, வார்டு-162க்குட்பட்ட நோபல் தெருவில் உள்ள காசா கிராண்ட் அடுக்குமாடி குடியிருப்புப் பகுதி மற்றும் சி.ஆர்.பி.எஃப் குடியிருப்புப் பகுதியில் பெருமளவு திடக்கழிவு உற்பத்தியாளர்கள் குப்பைக் கழிவுகளை தரம் பிரித்து வழங்குவது குறித்தும், வார்டு-167க்குட்பட்ட எம்.ஆர்.ஜி. சாலையில் கட்டப்பட்டு வரும் நூலகம் கட்டடம் கட்டுமானப் பணியினையும் பார்வையிட்டு ஆய்வு செய்து, கட்டுமானப் பணிகளை விரைந்து முடித்திடவும், குப்பைக் கழிவுகளை தரம் பிரித்து வழங்குவது தொடர்பாக அலுவலர்களுக்கு ஆலோசனைகளை வழங்கினார்.

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர், பெருநகர சென்னை மாநகராட்சி.**